# குழந்தைகள் தினம்

## குழந்தைகள் தினம்

அறிவு சுரக்கும் ஆனந்தக்காலம்!
இனியக் கனவுகள் ஈனும் பருவம்!
உறவின் முகவரியும், ஊரின் பெயரும்;
எழுதிமனத்துள் ஏந்தித் திரியும்!
ஐயம்பிறக்கும், ஒவ்வொரு நிலையிலும்;
ஓடும்பருவம் உலகை வியந்து!
ஔவை மொழியைக் கற்கும் காலம்!
அஃதே அறிவாம்; ஆன்றநல் வழியாம்!
இனியதாய் குழந்தைகட்கு ஈனும் வாழ்த்து!

**- கவிவளவன் 14-11-2019 11.55AM**

## பெண் குழந்தைகள் தின வாழ்த்து!

அமுதே மழையே ஆர்ப்பரிக்கும் கடலே!
இயன்ற பொருளில் எழுந்திடும் அன்பே!
கனியே கடலே கருணையின் வடிவே!
இனிதாய் நெஞ்சில் இயங்கும் அன்பே!
நனியதாய்ப் பிறந்த நாளாம் இதனில்,
அணியாய் மனத்தில் அன்பைத் தேக்கி;
அகிலம் புகழ வாழ்கவென வாழ்த்துகிறேன்!

- **கு.ப. அசோகன்** , 24-01-2022 (08.35 AM)

## பெண் குழந்தைகள் தினம்!

தன்னைச் சுமந்த கரங்கள்;
இயன்நிலை வாழ்வின்,
அறிவைச் சொல்லும்!

தன்கரம் பற்றிய;
மகளின் மனத்தால்,
தங்கச் சுரங்கமாய்,
அறிவை செய்யும்!

மகனோ, மகளோ,
தன்கரம் ஈந்த,
பெண் குழவி தன்னால்,
மண்ணகம் போற்றிய,

மாண்புகள் தெரிய,
சிவிகையால் உள்ளம்,
சிரித்தே மகிழ்ந்திடும்!
-- கவிவளவன் 11-10-2020